www.StudyGuideIndia.com

**8264**

Register Number | | | | | |

**Part III**

# பொருளியல் / ECONOMICS

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். 50 × 1 = 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக : 14 × 1 = 14

1. செல்வ இலக்கணத்தின் ஆசிரியர்

அ) ஆல்ஃபிரடு மார்ஷல் ஆ) இலயனல் ராபின்ஸ்

இ) ஆடம் ஸ்மித் ஈ) சாமுவேல்சன்.

2. முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படை சக்தியாக விளங்குவது

அ) திட்டமிடல் ஆ) தொழில்நுட்பம்

இ) அரசு ஈ) இலாப நோக்கு.

3. பயன்பாடு என்பது

அ) சமூக கருத்து

ஆ) பொருள் மற்றும் உளவியல் கருத்து

இ) அரசின் கருத்து

ஈ) அறிவியல் கருத்து.

[ Turn over

www.StudyGuideIndia.com

4. தேவையின் அதிகரிப்பை இதன் மூலம் காணலாம்

அ) தேவை வளைக்கோடு இடம் பெயர்வது

ஆ) ஒரே தேவை வளைக்கோட்டில் நகர்ந்து செல்லுதல்

இ) தேவை வளைக்கோட்டின் உச்சபுள்ளி

ஈ) தேவை வளைக்கோட்டின் கீழ்ப்புள்ளி.

5. அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள்

அ) உற்பத்தி தொழில்நுட்பம்

ஆ) உற்பத்திக் காரணிகளின் விலைகள்

இ) வரிகளும், சலுகைகளும்

ஈ) இவை அனைத்தும்.

6. நீண்ட காலத்தில்

அ) எல்லா காரணிகளும் மாறும்

ஆ) மாறும் காரணி மட்டும் மாறும்

இ) மாறா காரணி மட்டும் மாறும்

ஈ) மாறும் மற்றும் மாறா காரணி நிலையாக இருக்கும்.

7. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம்

அ) வட்டி ஆ) இலாபம்

இ) கூலி ஈ) வாடகை.

8. பணச்செலவின் உள்ளடக்கமானது வெளியுறுச் செலவு மற்றும்

அ) உள்ளார்ந்த செலவு

ஆ) சமூகச் செலவு

இ) மாறாச் செலவு

ஈ) பணச் செலவு.

www.StudyGuideIndia.com

9. நிறைவுப் போட்டி அங்காடியில் காணப்படும் நிலை

அ) ஒரே விற்பனையாளர்

ஆ) இரண்டு விற்பனையாளர்

இ) எண்ணிக்கையில்லா விற்பனையாளர்

ஈ) சில விற்பனையாளர்.

10. வாரம் என்பது இதனுள் ஒன்றை பயன்படுத்தியதற்காக கொடுக்கப்பட்ட விலை

அ) மூலதனம் ஆ) அமைப்பு

இ) உழைப்பு ஈ) நிலம்.

11. தொன்மை பொருளியல் கோட்பாடு .................. நிலவுவதாக கருதுகிறது.

அ) வேலையில்லா நிலை ஆ) மறைமுக வேலையின்மை

இ) முழுவேலை நிலை ஈ) குறைவேலையின்மை.

12. பேரியல் பொருளியல் சிந்தனையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர்

அ) டேவிட் ரிகார்டோ

ஆ) J. M. கீன்சு

இ) ஆடம் ஸ்மித்

ஈ) மால்தஸ்.

13. வங்கி வீதம் எப்போது உயர்த்தப்படுகிறது ?

அ) பணவாட்டம்

ஆ) பணவீக்கம்

இ) விலை நிலையாக இருத்தல்

ஈ) வேலையின்மை.

14. அரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது

அ) அனுமதிக் கட்டணம் ஆ) வெகுமதி மற்றும் மானியம்

இ) கடன் ஈ) வரி.



www.StudyGuideIndia.com

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 12 × 1 = 12

15. பொருளாதாரம் என்பது ........................ அறிவியலாகும்.

16. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு ........................ எனவும் அழைக்கப்படுகிறது.

17. சமநோக்கு வளைகோடு மையத்தை நோக்கி ........................ காணப்படும்.

18. தேவைக்கோடு கீழ்நோக்கி வருவதற்கு காரணம் ........................ .

19. அங்காடிக் காலத்தில் அளிப்புக்கோடு ........................ .

20. ........................ என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு, வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பாகும்.

21. இலாபம் என்பது மொத்த வருவாய்க்கும் ........................ உள்ள வேறுபாடாகும்.

22. சில்லோர் முற்றுரிமை அங்காடியில் உள்ள நிறுவனங்கள் தங்களுக்குள்ளே முக்கியமான ........................ உணர்ந்திருக்கும்.

23. மாற்று ஊதியம் என்பது ........................ செலவை குறிப்பது.

24. நுகர்வு சார்பு என்பது ........................ மற்றும் ........................ ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குகிறது.

25. பரிமாற்றச் சமன்பாடு ( $MV = PT$ ) என்பதை அளித்தவர் ........................ .

26. வரி விதிப்பின் அடிப்படை கோட்பாட்டை ........................ என்று அழைக்கிறோம்.

www.StudyGuideIndia.com

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : 12 × 1 = 12

| | | | |
|---|---|---|---|
| 27. | செல்வம் | அ) | $TR - TC$ |
| 28. | சந்தை சக்திகள் | ஆ) | கீன்ஸ் |
| 29. | பொருளாதார கோட்பாடுகள் | இ) | சிறந்த வரிமுறை |
| 30. | தேனீர் மற்றும் காபி | ஈ) | இருப்பு |
| 31. | குறுகிய கால விலை | உ) | மார்ஷல் |
| 32. | $a + b < 1$ | ஊ) | பதிலீட்டுப் பண்டங்கள் |
| 33. | இலாபம் | எ) | அளிப்பு, தேவை மற்றும் விலை |
| 34. | முற்றுரிமையாளர் போட்டி | ஏ) | அதிக நெகிழ்ச்சி உடையது |
| 35. | கடன்நிதிக் கோட்பாடு | ஐ) | ஊர்ந்து செல்லும் பணவீக்கம் |
| 36. | நீர்மை விருப்பம் | ஒ) | குறைந்து செல் விகித விளைவு விதி |
| 37. | கூலியும் விலையும் ஒன்றையொன்று தள்ளுகிறது | ஓ) | தற்கால கோட்பாடு |
| 38. | வளர்வீத வரி விதிப்பு முறை | ஔ) | E. M. சேம்பர்லின். |

www.StudyGuideIndia.com

IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக: $12 \times 1 = 12$

39. இலவச பண்டங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

40. பொதுவுடைமை பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற இருநாடுகளைக் கூறுக.

41. நிதிநிலை கோட்டிற்கு மறுபெயர் என்ன ?

42. செழுமையின் போதும், மந்தத்தின் போதும் தேவை எவ்வாறு மாறுபடுகின்றது ?

43. சமநிலை நிர்ணயிக்கப்படுவதில் காலத்தின் பங்கினை அறிமுகப்படுத்தியவர் யார் ?

44. காப்-டக்லஸ் உற்பத்தி சார்பினைக் கூறுக.

45. சராசரி-செலவை எவ்வாறு கணக்கிடுவாய் ?

46. அரசாங்கம் எவ்வாறு முற்றுரிமையை கட்டுப்படுத்துகிறது ?

47. ரிக்கார்டோவின் கூற்றுப்படி, எல்லா நிலங்களும் வாரம் பெறுகின்றனவா ?

48. J. B. சேயின் சந்தை விதியைக் கூறுக.

49. அருமை பணக்கொள்கை என்றால் என்ன ?

50. வரி என்றால் என்ன ?

## பகுதி - ஆ

V. *குறிப்புகள் :* i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *நான்கு* அல்லது *ஐந்து* வரிகளில் அமைந்திட வேண்டும் . $10 \times 3 = 30$

51. பொருளாதாரம் பற்றி ஆல்பிரட் மார்ஷலின் இலக்கணத்தை கூறுக.

52. இந்தியப் பொருளாதாரம் ஒரு கலப்புப் பொருளாதாரமா ? விவரி.

53. பொதுவுடைமையின் அடிப்படை சிறப்பம்சங்களை கூறுக.

54. சமநோக்கு வளைக்கோட்டின் பண்புகள் யாவை ?

55. தேவை-நெகழ்ச்சியின் வகைகள் யாவை ?

56. அங்காடிக் காலம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

57. அளிப்புக் கோடு இடம் பெயர்தலுக்கான காரணிகள் யாவை ?

www.StudyGuideIndia.com

58. மூலதனத்தின் வடிவங்கள் யாவை ?

59. வேலை பகுப்பு முறை என்பதன் பொருள் யாது ?

60. வாய்ப்புச் செலவு என்றால் என்ன ?

61. *MC* மற்றும் *AC*-க்கு இடையேயுள்ள உறவுகளைக் கூறுக.

62. இறுதிநிலை உற்பத்தித்திறன் பகிர்வு கோட்பாட்டின் எடுகோள்கள் யாவை ?

63. பெருக்கி - சிறுகுறிப்பு வரைக.

64. பணத்தின் இலக்கணம் யாது ?

65. வரிகளின் வகைகள் என்னென்ன ?

## பகுதி - இ

VI. *குறிப்புகள் :* i) எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *ஒரு பக்க* அளவில் அமைந்திட வேண்டும்.

$6 \times 10 = 60$

66. பழமைப் பொருளாதாரம் பற்றி சிறு குறிப்பு வரைக.

67. அங்காடிக் காலத்தில் சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?

68. வேலை பகுப்பு முறையின் சிறப்புகளையும், குறைகளையும் விளக்குக.

69. AR மற்றும் MR கோடுகளின் இடையேயான உறவுகளை எழுதுக.

70. இறுதிநிலைச் செலவினை சரியான விளக்கத்துடன் கூறுக.

71. முற்றுரிமையை கட்டுப்படுத்தும் வழி முறைகள் யாவை ?

72. சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளைக் கூறுக.

73. கீன்சு கோட்பாட்டின் சாராம்சத்தை தகவல் படம் ( Flow-chart ) வரைந்து விளக்குக.

74. மாநில அரசின் முக்கிய வருவாய் மற்றும் வரியற்ற வருவாய் எவை ? எவை ?

75. நேர்முக வரி மற்றும் மறைமுக வரியை வேறுபடுத்திக் காட்டுக.

[ Turn over

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VII. *குறிப்புகள் :* i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *மூன்று பக்க* அளவில் அமைந்திட வேண்டும்.

$3 \times 20 = 60$

76. பொருளாதாரத்தின் தன்மை மற்றும் எல்லைகளை விளக்குக.

77. குறைந்து செல் பயன்பாட்டு விதியினை, படம் வரைந்து விளக்கம் தருக.

78. அட்டவணை மற்றும் வரைபடத்துடன் தேவை விதியினை ஆராய்க.

79. முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விவரிக்கவும்.

80. ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை ஆராய்க.

81. பணக்கொள்கையின் நோக்கம் மற்றும் கருவிகளை விவாதிக்கவும்.

www.StudyGuideIndia.com